**BESE-046**

10846

# இளநிலை கல்வியியல் பருவத்தேர்வு (B.Ed.)

## Term-End Examination

## December, 2012

## BESE-046 : தமிழ் கற்பித்தல்

## (TEACHING OF TAMIL)

*Time : 3 hours* *Maximum Weightage : 70%*

குறிப்பு :

(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ii) அனைத்து வினாக்களுக்கும் மதிப்பெண்கள் சமம்.

---

1. **கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** 15

தாய்மொழியாசிரியர்கள் மொழியைக் கற்பிக்கும் முன்னர் கற்பிக்க வேண்டிய நோக்கங்களை அறிந்து கற்பித்தல் மிகவும் இன்றியமையாதது-- விளக்குக.

**அல்லது**

ஓர் ஆசிரியர் வினாக்களை கேட்டு கற்பித்தலை எவ்வாறு கையாளலாம் ? எடுத்துக் காட்டுகளு-டன் விளக்குக.

2. **கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** 15

வாய்மொழிப் பயிற்சியும், பேச்சும் மாணவரின் மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்வன-- இக் கூற்றின் படி வாய்மொழிப் பயிற்சியின் நோக்கங்கள் யாவை? வாய்மொழிப் பயிற்சியின் இன்றியமையாமையும் பயனையும் விளக்கவும்.

**அல்லது**

இலக்கணம் கற்பிக்கும் முறைகளை உதாரணங்களுடன் விளக்கி, அதன் நிறைகுறைகளை ஆய்க. பள்ளிகளில் இலக்கணத்தை ஆர்வமுடன் கற்பிக்க ஆசிரியர் மேற்கொள்ளும் வழிமுறைகளை விளக்குக.

3. **கீழ்க் காணும் வினாக்களில் எவையேனும் 4 வினாக்களுக்கு 150 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** 4x5=20

(a) மாணவர்களின் மொழி பயிற்சிக்கு நூலகத்தின் பங்கு.

(b) நிரல் வழிக் கற்றல் என்றால் என்ன ? கற்பித்தலில் இந்த அணுகு முறையை உதாரணங்களுடன் கூறுக.

(c) கேட்டெழுத்தலின் நோக்கத்தையும் பயனையும் விளக்குக.

(d) மதிப்பீடு அளவீடு, சொல்விளக்கம் இரண்டிற்க்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை விளக்குக.

(e) தமிழ் கற்பித்தலில் நாபிறழ் பயிற்சி நாநெகிழ் பயிற்சி ஏன் தேவைப் படுகிறது?

(f) கற்பித்தல் இரு வழிப் பாதயாக வகுப்பறையில் அமைந்துள்ளது என்ற கூற்றினை இரு உதாரணங்களுடன் விளக்குக.

(g) மாணவர்களிடையே அகராதியைப் பயன்படுத்தும் திறனை வளர்க்க ஏதேனும் 3 வழிமுறைகளைக் கூறுக.

4. **கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடை-யளிக்கவும்.** 20

நான் கற்கிறேன் எனக் கூறுவதைக் காட்டிலும் நான் அனுபவங்களைப் பெறுகிறேன் -- ஜான் டூயி. இவரின் கூற்றினை எவ்வாறு வகுப்பறை கற்பித்தலில் செயல்படுத்துவீர் ?

செயலாக்குவதில் நீவிர் கண்ட நிறைகுறைகளை விளக்குக.